சேருவில பிரதேச சபை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

சேருவில பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டுக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுடனான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேருவில பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தியுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

1.6 இணங்காமைகள்

1.6.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம்			
(i)	24 பிரிவு	சபையினால் நிர்மாணிக்கப்படட பாதைகளை இன்வென்றியிற்கு உட்படுத்தி இருந்ததுடன் அந்த அனைத்து பாதைகளையும் வரர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுத்திருக்க வில்லை.	அனைத்து பாதைகளையும் வர்த்தமானியில் பிரசுரிக்க தேவையான நடவடிக்கை எடுப்பதென.	பிரதேச சபை சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	119 பிரிவு	வாராந்த சந்தை ஒழுங்குபடுத்தலிற்காக துணைச் சட்டம் விதிக்கப்பட்டிருக்காததுடன் வாராந்த சந்தைக்கான வருடாந்த டெண்டர் கோரப்பட்டு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு முறையாக கட்டுப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு இடம்பெற்றிருக்க வில்லை.	வாராந்த சந்தைக்காக டெண்டர் கோரப்படுதல் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அதற்காக விண்ணப்பதாரர்கள் முன் வராததால் சபையினால் வாராந்த வருமானங்கள் அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக.	பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(iii) 134 பிரிவு	சபை அதிகார எல்லையினுள் அமைந்துள்ள முன்னேற்றமடைந்த பிரதேசங்களை சரியாக காலத்திற்கு காலம் இனங்கண்டு வீதவரி மற்றும் வரிகளை விதிக்க நடவடிக்கை எடுத்திருக்க வில்லை.	எதிர்காலத்தில் வீதவரி அறவிட தேவையான நடவடிக்கைகளை எடுப்பதென.	பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(iv) 159 பிரிவு	மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய ரூபா 27,973,520 ஆன நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை .அதில் ரூபா 938,295 ஆன தொகை 05 வருடங்களை விட விஞ்சி இருந்த நிலுவை மீதியாகும்.	நிலுவை வருமானங்களை சேகரிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதென.	பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ) 1989 ஏப்ரல் 17 திகதிய இலக்கம் 554/5 கொண்ட அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவை			
(i) 59 ஆம் விதி	ஓவ்வொரு வருட ஆரம்பத்திலும் சபை அதிகார பிரதேசதில் காணப்படும் வியாபாரம் மற்றும் கைத்தொழில்கள் தொடர்பான கணிப்பீடொன்றை மேற்கொண்டு வியாபார அனுமதிப் பத்திர வருமானத்தை திரட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் அனுமதி பத்திரம் மற்றும் கைத்தொழில் வரியை அறவிட்டு கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ள்ளதாக.	பிரதேச சபை விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ii)	193 ஆம் விதி	பாதீடு மற்றும் குறைநிரப்பு அங்கீகார செலவுகளுடன் செலவின விடயங்களின் உள்ளவாறான செலவுகளை ஒப்பிட்டு மிகை மற்றும் பற்றாக்குறைகளிற்கான காரணம் காட்டும் கூற்றுக்களை கணக்குகளுடன் சமர்ப்பித்திருக்கவில்லை.	எதிர்காலத்தில் காரணங்களை காட்டும் கூற்றை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதென.	பிரதேச சபை விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(iii)	218 ஆம் விதி	கிரயம் ரூபா 170,131,780 ஆன காணிகள் மற்றும் கட்டிடங்களை ஒவ்வொரு வருடத்திற்கும் ஒரு முறை கணிப்பீடு செய்திருக்கவில்லை.	எதிர்காலத்தில் கணிப்பீட்டிற்காக தேவையான நடவடிக்கைகளை எடுப்பதென தயவுடன் அறியத்தருகின்றேன்.	பிரதேச சபை விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	1980 இன் 47 ஆம் இலக்கம் கொண்ட தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் 2008 பெப்ரவரி 25 திகதிய இலக்கம் 1533/16 கொண்ட வர்த்தமானி ஏற்பாடுகள்	செல்லுபடியான சுற்றாடல் அனுமதிப் பத்திரமொன்று இன்றி வியாபாரங்களை நடாத்திச் செல்லும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.	எதிர்வரும் வருடத்தின் போது மதிப்பீட்டு அறிக்கை பிரகாரம் வியாபார நிறுவனங்கள் அனைத்தையும் அடையாளம் கண்டு அனுமதிப்பத்திரங்களை விநியோகிப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளதாக.-	சுற்றாடல் சட்டம் மற்றும் நேரொத்த வர்த்தமானி ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 17,019,630 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,082,224 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

வருமான மூலம்	2024				2023			
	மதிப்பிடப்பட்ட வருமானம்	பில் போடப்பட்ட வருமானம்	சேர்க்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பிடப்பட்ட வருமானம	பில் போடப்பட்ட வருமானம	சேர்க்கப்பட்ட வருமானம	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000
வாடகை	5,513	6,407	7,346	94	5,646	7,093	6,923	1,033
அனுமதிப்பத்திரக் கட்டணம்	820	809	809	-	845	717	717	-
ஏனைய வருமானம்	16,297	20,694	21,435	4,397	14,900	17,108	16,367	5,138
தொகை	**22,630**	**27,910**	**29,590**	**4.491**	**21,391**	**24,918**	**24,007**	**6,171**

2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
பல ஆண்டுகளாக காணப்பட்டு வரும் நிலுவை கடைவாடகை, நிலுவை நீதிமன்ற தண்டப்பணம், நிலுவை முத்திரைக் கட்டணம் அறவிட போதிய கவனத்தை செலுத்தி இருக்கவில்லை.	நிலுவை வருமானத்தை அறவிடதேவையான நடவடிக்கை எடுப்பதென.	நிலுவை வருமானத்தை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் விதிக்கப்பட்ட செயல்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் பிரதான 28 விடயங்களை நிரைவேற்ற துணைச் சட்டம் விதிக்கப்பட வேண்டியிருந்த போதும் 2024 திசெம்பர் 31 திகதி வரை 05 விடயங்களிற்கு மாத்திரம் துணைச் சட்டம் விதிக்கப்பட்டிருந்தது.	பதில் வழங்கப்படவில்லை.	பிரதேச சபை சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2022 ஆம் வருடத்திலிருந்து 2024 திசெம்பர் 31 திகதி வரை அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் 05 மாத்திரம் விநியோகிக்கப்பட்ட போதிலும் சபையின் எந்த ஒரு அனுமதியற்ற நிர்மான பணிகளும் அறிக்கை படுத்தப்படாததன் காரணமாக இந்த பணிகள் ஒழுங்குபடுத்தப்படாதிருப்பது அவதானிக்கப்பட்டது.	எதிர்காலத்தில் அனுமதியற்ற நிர்மான பணிகள் அனைத்தையும் பரிசோதித்து தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக.	காணிகள் அபிவிருத்தி நடவடிக்கைகள் முறைமை படுத்தப்பட வேண்டியதுடன் அனுமதியற்ற நிர்மானங்கள் தடுக்கப்பட வேண்டும்.

3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பிரதேச சபையினால் 2014 ஆம் ஆண்டில் ரூபா 19,000,000 ஆன கிரயத்தை மேற்கொண்டு நிர்மாணித்த சுடலை மீளாய்வாண்டிலும் எவ்வித பயன்பாடும் இன்றி காணப்பட்டது. பாதை நீரில் மூழ்குவது தொடர்பில் ஆய்வொன்று மேற்கொள்ளப்படாமல் சுடலை நிர்மாணிக்கப்பட்டிருந்தது.	சுடலையை திருத்தப்பட்டு எதிர்காலத்தில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதென.	குறைபாடுகள் முழுமையாக்கப்பட்டு சுடலையை பயன்பாட்டுக்கு கொண்டு வருவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ஆ)	சபைக்கு உரித்தான் 09 வாகனங்கள் பாவனைக்கு உட்படுத்தப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றுள் 07 வாகனங்கள் திருத்தப்பட வேண்டிய நிலையில் காணப்பட்டது.	தேவையான நிதி ஏற்பாடுகளை மேற்கொண்டதன் பின்னர் வாகனங்களை திருத்துவதற்கான தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக.	சொத்துக்கள் முறையாக முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
02/2017 ஆம் இலக்க 2017 திசெம்பர் 21 திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ செயற் த்திட்டத்தின் கீழ் சேருவில பிரதேச சபைக்கு கிடைத்த மற்றும் சபையினால் தற்போது பயன்படுத்திவரும் ரூபா 41,388,101 பெறுமதியான 11 வாகனங்கள் கணக்காய்வு திகதியன்றும் சபையின் பெயரில் சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	வாகனத்தை சபைக்கு சுவீகரித்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளதாக.	குறித்த வாகனங்களின் உரிமையை சபையின் பெயருக்கு சுவீகரித்துக் கொண்டு சொத்துக்கள் முகாமைத்துவத்தை முறைமை படுத்தப்பட வேண்டும்.

3.5 ஏனைய அமைப்புகளுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 19(XII) ஆம் பிரிவின் பிரகாரம், சபைக்கு உரித்தான காணியில் அல்லது கட்டிடத்தில் ஒரு பகுதியை 03 வருடங்களுக்கு மேற்பட்ட நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்கப்படும் போது, உள்ளூராட்சி விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சரிடம் முன் அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டும். இருப்பினும் 20 வருடங்களை அதிகமான நீண்ட கால குத்தகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் குறித்த விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் முன் அங்கீகாரம் இன்றி சினோ லங்கா பவர் ஜெனரல் தனியார் கம்பெனியுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தது	கிழக்கு மாகாண ஆளுநர் சூரிய மின்சக்தியை பொருத்துவதற்காக அங்கீகாரம் வழங்கி உள்ளதாக தெரிவிக்கப்பட்டு ஒப்பந்தம் கைச் சாத்திடுமாறு உள்ளூராட்சி ஆணையாளரினால் எழுத்து மூலமாக அறிவுரை பெற்று தந்திருந்ததுடன் அந்த அறிவுரையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக	வருமானங்களை ஈட்டிக் கொள்ளக் கூடிய வகையில் ஒப்பந்தங்கள் திருத்தப்பட்டு சட்ட அறிவுரைகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

3.6 மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கையை கவனத்திற் கொள்கையில் 11 பதவிகளில் 14 வெற்றிடங்கள் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. இந்த வெற்றிடங்களை விரைவில் நிரப்ப அல்லது அங்கீகார பதவியணியினர் அளவை மீண்டும் திருத்திக் கொள்ளவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை.	பதவி வெற்றிடங்களை நிரப்பிதருமாறு கோரிக்கை செய்துள்ளதென.	வெற்றிடங்களை நிரப்ப துரிதமாக நடடிக்கை எடுக்க வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

4.1 உள்ளக கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
உள்ளக கணக்காய்வொன்றை இஸ்தாபித்திருந்த போதிலும் செயற்பாட்டு நிலையில் காணப்படவில்லை.	உள்ளக கணக்காய்வை வினைத்திறனாகவும் பயனுறுதியுடனும் பேணி செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக.	உள்ளக கணக்காய்வு முறையாக மற்றும் வினைத்திறனாக மேற்கொள்ளப்பட வேண்டும்

4.2 பாதீட்டு கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம், செலவினங்கள் மற்றும் உள்ளவாறான வருமானம், செலவினங்களுடன் ஒப்பிடுகையில் 06 வருமான விடயங்களில் 14 சதவீதம் முதல் 421 சதவீதம் வரையும், 06 செலவின விடயஙகில் 12 சதவீதம் முதல் 73 சதவீதம் வரையும் விலகல் விலகல்கள் அவதானிக்கப்பட்டதுடன் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	பதில் வழங்கப்படவில்லை.	பாதீட்டை நடைமுறை சாத்தியமாக தயாரிக்க வேண்டும்.

4.3 சுற்றாடல் பிரச்சினை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் பிரகாரம், திரட்டும் குப்பைகளை வகைப்படுத்தாது திரட்டுதுதல், அவைகளை சுதந்திரமாக வெளியிடல், மீள்சுழச்சி செயல்முறையை தொடர்ந்து செய்யாமை, அதிகார பிரதேசத்திற்க உகந்த வெளியிடும் பொறிமுறையொன்றை பின்பற்றாதமை ஆகிய காரணங்களால் வன சீவராசிகளால் கழிவு பொருட்கள் நுகரப்படல் மற்றும் உக்காத குப்பைகள் பிரதேசம் பூராவும் சிதறிக் காணப்பட்டன.	ஏதிர்காலத்தில் இந்த அனைத்து விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தி தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதென.	தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரகாரம் கழிவு முகாமைத்துவ நடவடிக்கை முறைமையாக்க வேண்டும்.

4.4 நிலைபேறான அபிபிருத்தி நோக்கங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபையினால் 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்திலுள்ள நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குககள் மற்றும் குறித்த பிரமாணங்களை இனங்காணப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் 07 நிலைபேறான அபிவிருத்தி இலக்குளை காலத்திற்கேற்ப நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	சபையினால் 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்திலுள்ள நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குககள் மற்றும் குறித்த பிரமாணங்களை இனங்காணப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் 07 நிலைபேறான அபிவிருத்தி இலக்குளை காலத்திற்கேற்ப நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்திருந்ததாக.	நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் குறித்த பிரமாணங்களை அடைந்து கொள்ள வேண்டும்.